DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 258/2024 |
| Deposition of Witness for | : | P.W.2 |
| Name | : | முத்துக்குமார் |
| Father's Name | : | கணேசன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் 1வது எதிரி சிறையில் உள்ளார். 2வது எதிரி ஆஜர்.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 11.06.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தூதையில் வசித்து கலியாந்துார் அரசு மதுபானக்கடை 7674ல் மேற்பார்வையாளராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எதிரி மணிகண்டன் என்பவரையும் தெரியும். கடந்த 06.08.2018ம் தேதி மாலை சுமார் 4.00 மணியளவில் எதிரிகள் இருவரும் எங்கள் மதுபானக்கடைக்கு வந்து மது கேட்டனர். எதிரி மணிகண்டன் என்பவர் ரூ.150/- பணம் கொடுத்து மது வாங்கினார். எங்களது கடையின் விற்பனையாளர் மலையரசன் என்பவர் பணத்தை பெற்றுக்கொண்டு 180மிலி அளவுள்ள மதுபானத்தை கொடுத்துவிட்டு சில்லறை பணம் ரூ.40/-யும் கொடுத்தார். பின்னர் அரை மணி நேரம் கழித்து எங்களது விற்பனையாளரிடம் வந்து நான் ரூ.200/- கொடுத்ததாகவும் பாக்கி சரியாக தரவில்லை என பிரச்சினை செய்தனர்.

WEB COPY

2. அதற்கு எங்களது விற்பனையாளர் சரியாக சில்லறை கொடுத்ததாக கூறினார். அதற்கு 2வது எதிரி அருண் என்பவர் எங்களது விற்பனையாளர் மலையரசனை பார்த்து "**தேவடியா மகனே**" என அசிங்கமாக பேசி, இத்தோடு செத்து தொலைடா என 2வது எதிரி அருண் என்பவர் கத்தியை வைத்து விற்பனையாளர் மலையரசனின் கழுத்தை வெட்ட வந்தார், அப்போது மலையரசன் தனது இடது கையை வைத்து தடுத்ததால் மலையரசனின் இடது கையின் சதை சரிந்து ரத்தக்காயங்கள் ஏற்பட்டது, பின்னர் அவரை நானும், விற்பனையாளர் குமாரும் திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு அந்த வழியாக வந்த போக்கு ஆட்டோவில் அழைத்து சென்றோம்.

3. சம்பவத்தின் போது எதிரி அருண் கையில் வாளுடனும், மணிகண்டன் கையில் அருவாளுடனும் எங்கள் கடைக்கு மது வாங்க வந்திருந்த ஆறுமுகம் என்பவரை மிரட்டி அவரிடம் நாங்கள் அப்பகுதி ரவுடி என்று சொல்லி அருவாளை காண்பித்து வண்டியை விடுடா என மிரட்டி வாகனத்தை வாங்கி இருவரும் ஆளுக்கொரு வாகனத்தில் சென்றுவிட்டனர். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. 1வது எதிரியின் பெயரை எத்தனை நாள் கழித்து நான் தெரிந்துகொண்டேன் என்றால் காவல்நிலையத்தில் வைத்து தெரிந்து கொண்டேன். காவல்நிலையத்திற்கு எப்போது சென்றோம் என்றால் சம்பவத்திற்கு பிறகும், மருத்துவமனை சென்றபிறகும் சுமார் அரை மணி நேரத்தில் காவல்நிலையம் சென்றுவிட்டோம். சம்பவம் நடைபெற்றவுடன் காவல்நிலையத்திற்கு தகவல் கொடுத்துவிட்டு மருத்துவமனைக்கு சென்றோம், மருத்துவமனையிலிருந்து காவல்நிலையம் செல்லும்போது அங்கு எதிரிகள் இருந்தனரா என்றால் இருந்தனர் சுமார் 6.30 மணியிருக்கும். காவல்நிலையத்தில் தான் எதிரிகளின் பெயரை கேட்டு தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். 2வது எதிரி அசிங்கமாக திட்டிய விபரத்தை போலிசாரிடம் நான் கூறியிருக்கிறேனா என்றால் கூறியிருக்கிறேன்.

WEBCOPY

2. ஆறுமுகம் பெயரை எப்போது கேட்டு தெரிந்து கொண்டோம் என்றால் காவல்நிலையத்தில் வைத்து தான் எனக்கு தெரியும் ஆனால் எங்கள் கடையில் வேலை பார்த்த விற்பனையாளர்களுக்கு அவரின் பெயர் தெரியும். ஆறுமுகம் எந்த ஊரைச் சார்ந்தவர் என்று எனக்கு தெரியாது. ஆறுமுகம் சிவகங்கை மாவட்டத்தை சார்ந்தவர் அல்ல என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காயம்பட்ட நபரை அழைத்து செல்லும்போது நாங்கள் மூவரும் கடையை அடைத்துவிட்டுதான் சென்றோம். காயம்பட்ட நபர் வெட்டுப்பட்டவுடனே கடையின் சட்டரை இழுத்து அடைத்துவிட்டோம். எதிரிகள் பாட்டிலால் எறிந்து சேதப்படுத்தினார்கள். எத்தனை பாட்டில்கள் எறிந்தார்கள் என்றால் தெரியவில்லை, 2, 3 இருக்கலாம். நாங்கள் மலையரசனை ஏற்றிசென்ற போக்கு ஆட்டோவின் டிரைவரை எனக்கு நன்றாக தெரியும்.

3. அவர் பெயர், விபரங்கள் போலிசாரிடம் சொன்னோ என்றால் ஆய்வாளர் அது சம்மந்தமாக என்னிடம் கேட்கவில்லை. எந்த ஆயுதங்களால் தாக்கினார்கள் என்று மருத்துவரிடம் யார் சொன்னது என்றால் குமார் தான் சொன்னார். யார் எந்த ஆயுதத்தால் தாக்கினார் என்ற விபரத்தை கூறியிருக்கிறோம் என்றால் கூறியிருக்கிறோம். எங்கள் கடையின் மேலாளருக்கு தகவல் சொன்னேனா என்றால் சொன்னேன். காயம்பட்ட மலையரசனுக்கு இடது கை அல்லது வலது கை பழக்கம் உடையவரா என்றால் அவர் வலது கை பழக்கம் உடையவர். நான் தான் புகார் மனுவினை எழுதினேன். அதில் மலையரசன் கையொப்பம் செய்தாரா என்றால் புகார் மனு கொடுக்கும்போது மலையரசன் மயக்க நிலையில் இருந்தார் பிறகு போலிசார் விசாரித்தபோது தான் சம்பவத்தை பற்றி அவர்களிடம் சொன்னார். புகார் மனுவில் நானும், குமாரும் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளோம்.

4. வீச்சருவாளுக்கும் வெட்டருவாளுக்கும் வெவ்வேறு வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும் எதிரிகளுக்கும் நடந்ததாக சொல்லப்படும்

WEBCOPY

சம்பவத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எங்களது டாஸ்மாக் நிறுவனம் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை அப்படியே ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**மறு விசாரணை:** இல்லை

/Sd./ S. Mohana Ramya,
**உதவி அமர்வு நீதிபதி,**
**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**
**சிவகங்கை.**

WEB COPY